# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **O.S. No. 7/2020** | **Date :** 03.01.2024 | **DW2** |
| Name: மாரிகவுண்டர் | S/o. **ராமர்** | |
| Evidence Recorded Time: 12.36 P.M. to 12.45 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

ராமசாமி கேட்டுக்கொண்டதன் பேரில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான பட்டா எண், சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சங்கதிகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் பணம் வாங்கி கொடுத்தது தெரியும். மேற்படி பணத்தை வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தாரா என்றால் E.B யில் இருந்து வாங்கி கொடுத்தார். E.B யில் இருந்து பணி ஓய்வு பெற்று எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் நினைவில்லை. நான் பணம் வாங்கி கொடுத்தாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், ராமசாமிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் பணம் வாங்கி கொடுத்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொல்லியிருப்பேன் என்றால் அவ்வாறு இல்லை, பணத்தை பெற்றுக்கொண்டார். நான் பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் நானும் ராமசாமியும் சேர்ந்து மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பணம் வாங்கி கொடுத்திருந்தால் ராமசாமி தாக்கல் செய்த பதிலுரையில் சொல்லியிருப்பார் என்றாலும் பதிலுரையில் என்னை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. ராமசாமிக்கு நான் தாய்மாமா மகன் என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. E.B யில் இருந்து எப்போது ராமசாமி பணம் எடுத்து வந்தார் என்றால் முதல் எடுத்து வைத்திருந்து மறுநாள் கொடுத்தார். அவ்வாறு பணம் எடுத்துக்கொடுத்திருந்தால் அதற்கான ரசீது எடுத்து கொடுத்திருப்பார் என்றாலும், பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பணம் கொடுப்பதற்கு முதல் நாள் பணம் E.B யில் இருந்து பணம் எடுத்து வந்ததாக பொய்யாக கூறுகிறேன்

என்றாலும், அவர் 7 ஆண்டுகளுக்கு முன்பே  E.B யில் இருந்து இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டார் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஓம்/–DW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.